# amfori BSCI கண்காணிப்புச் செயல்முறையில் தொடர்புடைய தொழில் பங்குதாரர்களுக்கான அமல்படுத்துதல் விதிமுறைகள் (உற்பத்தியாளர்கள்)[1]

## I. அறிமுகம்

இந்த ஆவணத்தின் நோக்கத்திற்காக, **"உற்பத்தியாளர்கள்"** என்பது, ஒரு amfori BSCI பங்கேற்பாளரின் வழங்கல் சங்கிலியில் உள்ள, பொருட்களை (உணவு அல்லது உணவு அல்லாத) உற்பத்தி செய்கின்ற, அல்லது மூலப்பொருட்களை உற்பத்தி செய்கின்ற, **amfori BSCI பங்கேற்பாளர் அல்லது தொழில் பங்குதாரரின் தகுந்த விழிப்புணர்வின் விளைவாக** amfori BSCI கண்காணிப்புச் செயல்முறையில் சேர்த்துக்கொள்ளப்படும் தொழில் பங்குதாரரைக் குறிக்கும்.

இந்த முடிவு, நேரடியாக amfori BSCI பங்கேற்பாளரிடமிருந்து அல்லது மறைமுகமாக ஒரு amfori BSCI பங்கேற்பாளரின் தொழில் பங்குதாரரிடமிருந்து வரலாம்.

கண்காணிப்புச் செயல்முறையில் உற்பத்தியாளரைத் தங்கள் சொந்த வரையறையின் இடர்களைப் பொறுத்து, எந்த நேரமும் சேர்க்கும் அல்லது நீக்கும் உரிமை, amfori BSCI பங்கேற்பாளர்களுக்கு மட்டுமே உள்ளது.

இந்த அமல்படுத்துதல் நடைமுறைகளில் கையொப்பமிடுவதன் மூலம், amfori BSCI நடத்தை விதியின் மதிப்புகள் மற்றும் கொள்கைகளை **உற்பத்தியாளர்கள்** ஒப்புக்கொள்கிறார்கள், மற்றும் amfori BSCI நடத்தை விதியின் கொள்கைகளைக் கடைப்பிடிக்கத் தேவையான தகுந்த நடவடிக்கைகளை தங்கள் சொந்த பணிமனைகளில் எடுப்பதற்குப் பொறுப்பேற்றுக்கொள்கிறார்கள்.

[1] பதிப்புரிமை 2017 மூலம் amfori

மேலும், தங்களுடைய முக்கியமான தொழில் பங்குதாரரை ஒரு பொறுப்பான வழியில் செயல்படுமாறு ஈடுபடுத்துகிறார்கள்.

## II. சமூகப் பொறுப்புணர்வுள்ள வணிகத்திற்கு அர்ப்பணிப்பு

2.1. amfori BSCI நடத்தை விதிகளில் உள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவதில், **உற்பத்தியாளர்கள்** தங்கள் amfori BSCI பங்கேற்பாளர்களுடன் இணைந்து கூட்டாகச் செயல்படுகின்றனர், மற்றும் தங்கள் பங்குதாரர்களுடன் amfori BSCI நடத்தை விதியின் பயன்பாட்டிற்காக ஒரு ஆக்கபூர்வமான மற்றும் வெளிப்படையான உரையாடலைத் தொடர்கின்றனர்.

2.2. உற்பத்தியாளர்கள், தங்களுடைய amfori BSCI நடத்தை விதி ஒப்புதலை தங்கள் தொழில் பங்குதாரர்களுக்குத் தங்கள் நிறுவன அமைப்பு வழியே **செயலூக்கமாகத் தெரிவிக்கின்றனர்.** உற்பத்தியாளர்கள் amfori BSCI நடத்தை விதியை வெளிப்படையாக அணுகக்கூடிய இடத்தில் உள்ளூர் மொழியில் காட்சிப்படுத்த வேண்டும்.

2.3. amfori BSCI நடத்தை விதி மற்றும் அமல்படுத்துதல் விதிமுறைகளை **வாசித்துப் புரிந்துகொண்டதாக** உற்பத்தியாளர்கள் உறுதிப்படுத்த வேண்டும். மேலும், தங்கள் செல்வாக்கு வட்டத்திற்குள் அவற்றை முழுமையாகக் கடைப்பிடிப்பதற்குச் செயலாற்றப் பொறுப்பேற்க வேண்டும்.

2.4. amfori BSCI நடத்தை விதி சம்பந்தப்பட்ட தங்கள் பொறுப்புக்களை எதிர்கொள்வதற்கான **நடைமுறைகளையும் தேவையான ஆதாரங்களையும்** உற்பத்தியாளர்கள் கொண்டிருக்க வேண்டும். மேலும், அதன் அமல்படுத்துதலில் தொடர்ச்சியான முன்னேற்றத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

2.5. உற்பத்தியாளர்கள், தங்களுடைய முக்கியத் தொழில் பங்குதாரர்கள் amfori BSCI நடத்தை விதிமுறையை முழுவதுமாகக் கடைப்பிடிக்க வைக்க வேண்டும். மேலும், தங்கள் செல்வாக்கு வட்டத்திற்குள், தங்களுடைய சொந்த பங்குதாரர்களுக்கு amfori BSCI நடத்தை விதியைப் பொருந்தும்படிச் செய்வதற்குத் தேவையான நியாயமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

2.6. உற்பத்தியாளர்கள், **நடத்தை விதியின் மதிப்புகள் மற்றும் கொள்கைகளைப் புறக்கணிப்பது மற்றும்/அல்லது அமல்படுத்துதல் விதிமுறைகளை மீறுவது ஆகியவை,** amfori BSCI பங்கேற்பாளர்கள் அல்லது பொருந்தும் தொழில் பங்குதாரர்கள் கையொப்பமிட்ட உற்பத்தியாளர்களுடன் **தங்களுடைய வணிகத் தொடர்புகளை**

©பதிப்புரிமை amfori 2017

**நிறுத்திக்கொள்ளப்** போதுமானவை என்பதை ஒப்புக்கொள்கின்றனர். இந்த விஷயத்தில், நிரூபிக்கும் பொறுப்பு, amfori BSCI பங்கேற்பாளர் அல்லது பொருந்தும் தொழில் பங்குதாரர்களிடம் உள்ளது.

## III. வணிக நிறுவனக் கலாச்சாரத்திற்குள் சமூகப் பொறுப்புணர்வினை உட்பொதித்தல்

3.1. **தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளைப்** பணியிடப் பிரச்சனைகளில் பலமான தகவல் பரிமாற்றங்களில் ஈடுபடுத்தும் சிறந்த நிர்வாக நடவடிக்கைகளை உற்பத்தியாளர்கள் உருவாக்க வேண்டும்.

3.2. amfori BSCI நடத்தை விதிமுறைகளை கடைப்பிடிப்பதற்கும், தொழிலாளர்களின் தகுந்த பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் உற்பத்தியாளர்கள் **கொள்கைகளையும் நடைமுறைகளையும்** அமைக்க வேண்டும்.

3.3. **தங்கள் உரிமைகள்** மற்றும் பொறுப்புகள் பற்றி **தொழிலாளர்களுக்குக்** குறிப்பாக, மிகவும் பின்தங்கிய குழுக்களுக்கு (எ.கா. புலம்பெயர்ந்த தொழிலாளர்கள்) விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு குறிப்பிட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

3.4. வணிக நிறுவனக் கலாச்சாரத்தில் amfori BSCI நடத்தை விதியை உட்பொதிக்க, மேலாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் மத்தியில் உற்பத்தியாளர்கள் **போதுமானத் திறனை வளர்க்க வேண்டும்.**

3.5. வணிக நிறுவனக் கலாச்சாரத்தில் பொறுப்புணர்வுள்ள வணிகத்தின் கொள்கைகள் ஒருங்கிணைப்பில் பங்களிப்பதற்கு அனுமதிக்கும் வகையில் உற்பத்தி, மனித வளங்கள் மற்றும் பிற தொடர்புடைய துறைகள் (அல்லது தனிநபர்கள்) ஆகியற்றிற்கு **பயிற்சியளித்து ஊக்கப்படுத்த** வேண்டும்.

©பதிப்புரிமை amfori 2017

## IV. அவர்களது சொந்த பணிமனைகள் மற்றும் வழங்கல் சங்கிலியின் ஒத்துழைப்பு மற்றும் அதிகாரமளித்தல்

4.1. உற்பத்தியாளர்கள், **பயிற்சிகளில் ஈடுபட்டு, தங்கள் சொந்த ஊழியர்களை** amfori BSCI நடத்தை விதியில் அமைக்கப்பட்டுள்ள கொள்கைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையானத் திறன்களை வளர்ப்பதற்காக **ஆதரிக்கின்றனர்**.

4.2. **உற்பத்தியாளர்கள், தங்கள் தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர் பிரதிநிதிகள் amfori BSCI நடத்தை விதியின் கொள்கைகளைக் கடைபிடிப்பது மீதான பொறுப்புகள் பற்றி அவர்களுடன் ஒரு ஆக்கபூர்வமான மற்றும் வெளிப்படையான உரையாடலை நாடுகின்றனர்**

4.3. **உற்பத்தியாளர்கள், தங்களுடையத் தொழிலாளர் பங்குதாரர்கள் amfori BSCI நடத்தை விதியின் கொள்கைகளைக் கடைபிடிப்பது மீதான பொறுப்புகள் பற்றி அவர்களுடன் ஒரு ஆக்கபூர்வமான மற்றும் வெளிப்படையான உரையாடலை நாடுவதோடு இந்த எதிர்பார்ப்புகளை எதிர்கொள்வதில் அவர்களுக்கு உதவுகின்றனர்.**

## V. தங்கள் சொந்த பணிமனைகள் மற்றும் வழங்கல் சங்கிலியில் தகுந்த விழிப்புணர்வு

5.1. உற்பத்தியாளர்கள், பின்வருவனவற்றில் **தகுந்த விழிப்புணர்வுடன் செயல்படப் பொறுப்பேற்கின்றனர்**: (a) amfori BSCI நடத்தை விதிக்கு எதிரான தங்கள் தொழிலின் உண்மையான மற்றும் சாத்தியமான எதிர்மறைத் தாக்கங்களைக் கணக்கீடு செய்தல்; (b) இந்த எதிர்மறைத் தாக்கங்களை ஏற்படுத்தும் மிக முக்கியமான இடர்கள் தங்கள் சொந்த வசதிகள் மற்றும் வழங்கல் சங்கிலியில் எந்த இடத்தில் நிகழ்கின்றன என்பதைக் கண்டறிதல் மற்றும் (c) அவற்றைத் தடுக்கும் மற்றும்/அல்லது amfori BSCI நடத்தை விதியுடன் அவைகள் இணங்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டு செயல்படுதல்.

5.2. உற்பத்தியாளர்கள், தங்களுடைய சொந்தத் தொழில் மற்றும் தொழில் பங்குதாரர்களின் பொறுப்பான நடத்தையைப் பற்றி நம்பகமானத் தகவல்களைச் **சேகரித்து மதிப்பிடுகின்றனர்**, மற்றும் அவர்கள் **தகுந்த விழிப்புணர்வுடன்**

©பதிப்புரிமை amfori 2017

செயல்பட்டதற்குத் தேவையான **ஆவண ஆதாரங்களை வைத்திருக்கிறார்கள்.** அவர்கள், amfori BSCI நடத்தை விதியின் கொள்கைகளுடன் ஏதாவது முரண்பாடு மீதான **மூல காரணங்கள்** மீது கூடுதல் விவரங்களைத் தேடுகின்றனர். மற்றும், தேவையானத் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள்.

5.3. உற்பத்தியாளர்கள், **தங்கள் தொழில் பங்குதாரர்கள்** amfori BSCI நடத்தை விதியை அமல்படுத்துவதில் மற்றும்/அல்லது நிலைநிறுத்துதலில் தங்களது முன்னேற்றம், மற்றும் தாங்கள் ஈடுபட்டுள்ள amfori BSCI நடத்தை விதியின் மதிப்புகள் மற்றும் கொள்கைகளுக்கெதிரான எதிர்மறைத் தாக்கத்திற்கான தங்களின் பதில்களுக்குக் கிடைக்கும் பலன்கள் பற்றி **முறையாக அறிக்கை அளிக்க** வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறார்கள்.

5.4. உற்பத்தியாளர்கள், தங்கள் நடவடிக்கைளால் எதிர்மறைத் தாக்கமடைந்த தனி நபர்களுக்குப் (குறிப்பாகத் தங்களுடைய தொழிலாளர்களுக்கு) பதிலளிக்க, தங்களால் இயன்ற அளவு அதிகமாக, ஒரு திறம்பட்ட **இயக்கநிலை குறைதீர்ப்பு வழிமுறையில்** ஈடுபட அல்லது ஆதரவளிக்க வேண்டும்.

## VI. தகவல் மேலாண்மை

6.1. உற்பத்தியாளர்கள், தங்கள் அமல்படுத்துதல் திட்டம் மற்றும் தங்கள் சொந்தத் தொழிலின் தொடர்ச்சியான முன்னேற்றம் பற்றியும், amfori BSCI நடத்தை விதியின் மதிப்புகள் மற்றும் கொள்கைகளுக்கு எதிரான தாக்கத்திற்கான ஏதாவது பயனுள்ள பதில்கள் பற்றியும், **amfori BSCI பங்கேற்பாளர்களுக்கு செயலூக்கமாகத் தெரிவிக்க வேண்டும்.**

6.2. உற்பத்தியாளர்கள், சாத்தியமான பாதிப்படைந்த பங்குதாரர்களின் **கவலைகளைப் புரிந்து** கொண்டு அவற்றிற்கான அறிவுரையும் ஆலோசனையும் பெறுவதற்காக வெளியே நம்பிக்கையான, தனித்துச் செயல்படும் வல்லுநர்களை நாடுகிறார்கள். அவர்களின் அமல்படுத்துதல் நடைமுறையினைச் சரிபார்க்க, அரசாங்கங்கள், சிவில் சமூகம் மற்றும் தொழிலாளர்கள் பிரதிநிதிகள் இதில் அடங்குவார்கள்.

6.3. உற்பத்தியாளர்கள், தங்களுடைய மற்றும்/அல்லது தங்களது தொழில் பங்குதாரர்களின், குறிப்பாகத் துணை ஒப்பந்தக்காரர்களின், amfori BSCI நடத்தை விதியின் மதிப்புகள் மற்றும் கொள்கைகள் மீது எதிர்மறையானத் தாக்கங்களை

©பதிப்புரிமை amfori 2017

உண்டாக்கக்கூடிய, எந்தவொரு தவறான நடத்தையையும், தங்களுக்கு அது தெரியவந்த உடனே **amfori BSCI பங்கேற்பாளருக்குத் தெரிவிக்கப் பொறுப்பேற்கின்றனர்.**

## VII. முன்னேற்றங்களைக் கண்காணித்தல்

7.1. உற்பத்தியாளர்கள், **தங்களாலும், உற்பத்தி செயலில் ஈடுபட்டுள்ள தங்களது தொழில் பங்குதாரர்களாலும்** amfori BSCI நடத்தை விதிமுறை அனுசரிக்கப்படுகிறதா என்பதை ஒரு வளர்ச்சி சார்ந்த அணுகுமுறையின் அடிப்படையில் **கண்காணிக்கின்றனர்**.

7.2. உற்பத்தியாளர்கள், **நம்பிக்கைக்குரிய உறவுகளை வைத்துக்கொள்வதின்** முக்கியத்துவத்தை ஒத்துக்கொள்கிறார்கள். மேலும், எந்தத் தகவலையும், குறிப்பாக amfori BSCI நடத்தை விதியைக் கடைப்பிடிப்பதில் தங்களின் செயல்திறனைக் கண்காணிப்பதற்கான முக்கிய ஆதாரங்களைத் தவறாகப் பயன்படுத்துவதில் ஈடுபட மாட்டார்கள்.

7.3. உற்பத்தியாளர்கள், amfori BSCI சார்பாகத் தனிப்பட்ட தணிக்கையாளர்களோ அல்லது amfori BSCI தணிக்கைகளை நடத்தும் ஒரு தணிக்கை நிறுவனத்தின் பிரதிநிதிகளோ தேவையான ஆவண ஆதாரங்களைச் **சேகரிப்பதற்குச் சம்மதிக்கிறார்கள்.** உற்பத்தியார்களின் உற்பத்தி தளம்(கள்) மற்றும் தணிக்கைக்குத் தொடர்புடைய வணிக **ஆவணங்களின் பிரதிகள் போன்றவை இதில் அடங்கும்** - ஆனால் அவை மட்டுமல்ல.

7.4. தொழிலாளர்களுடன் **இரகசிய நேர்காணல்கள்** மற்றும் தொழிலாளர்கள் சுதந்திரமாகத் தணிக்கையாளர்களால் தேர்ந்தெடுக்கப்படுதல் ஆகியவை உற்பத்தியாளர் தரப்பிலிருந்து எந்தவொரு செல்வாக்கும் இல்லாமல் நடத்தப்படுகின்றன என்று உற்பத்தியாளர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.

7.5. **அனைத்துத் தணிக்கைத் தகவல்களும் amfori BSCI மேஜையில் பதிவு செய்யப்படும் என்று உற்பத்தியாளர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.** amfori BSCI பங்கேற்பாளர்கள் மத்தியில் அந்தத் தணிக்கை அறிக்கைகளைப் பகிர்ந்து கொள்வதற்கு இந்த மேடை அனுமதிக்கிறது.

7.6. உற்பத்தியாளர்கள், தங்களுடைய வசதிகளில் amfori BSCI தணிக்கையின்போது சேகரிக்கப்பட்ட தகவல்கள் அனைத்தும் **மூன்றாம் தரப்பினருடன் பகிர்ந்து கொள்ளப்படலாம்** என்று ஒப்புக்கொள்கின்றனர் (i) அது amfori BSCI இன் கட்டமைப்பிற்குள் நிகழும்வரை; (ii) amfori/amfori BSCI தொடர்பான நடவடிக்கைகள் அல்லது சார்பான விதிகளுக்காக அத்தகையப் பரிமாற்றங்கள் தேவைப்படும்வரை,

©பதிப்புரிமை amfori 2017

மற்றும்/அல்லது (iii) மூன்றாம் தரப்பு நபர்கள், வழங்கப்படும் தகவல்களை மரியாதையுடனும் அந்த நிகழ்வுக்குத் தொடர்பான நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளச் சம்மதிக்கும்போது.

7.7. உற்பத்தியாளர்கள், தங்களுடைய வசதியில், amfori BSCI தணிக்கை நடத்தப்படும்போது, amfori BSCI தணிக்கையாளர்கள் சாட்சியம் தணிக்கைக்கு உட்படலாம் என்பதை ஒப்புக்கொள்கிறார்கள். சாட்சியம் தணிக்கைகள், amfori BSCI தணிக்கைகளை நடத்தும் தணிக்கையாளர்கள்/தணிக்கை நிறுவனங்களின் தரத்தை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டது. எனவே, உற்பத்தியாளர்களின் செயல்திறன் அல்லது தணிக்கை முடிவுகளில் அவை எந்தவொரு நிகழ்வையும் கொண்டிருக்கவில்லை மற்றும் உற்பத்தியாளருக்குக் கூடுதல் செலவேதும் இல்லை. உற்பத்தியாளர்கள், வேண்டுகோள் விடுத்தால், amfori BSCI சமூகத் தணிக்கையில் ஒரு சாட்சியம் தணிக்கை மற்றும் கூடுதல் தணிக்கையாளர்கள் அவர்கள் வசதியை அணுகுவதற்கு சேர்த்துக்கொள்ள அனுமதிக்கப்படும் என்பதை ஒப்புக்கொள்கிறார்கள்.

7.8. உற்பத்தியாளர்கள், தங்களுடைய பணிமனைகள் மற்றும் உற்பத்தித் தளங்கள், **amfori BSCI ஒருங்கிணைந்த திட்டத்தின்** சட்டத்தில் உள்ள சாட்சியம் தணிக்கை, நகல் தணிக்கைகள், மற்றும் சீரற்ற முன்னறிவிப்பின்றி சோதனையிடுதல் (RUC) போன்ற, ஆனால் அது மட்டுமல்ல, விசாரணை நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படக்கூடும் என்பதற்குச் சம்மதிக்கிறார்கள். சீரற்ற முன்னறிவிப்பின்றி சோதனையிடுதல் (RUC) முடிவுகள் முந்தைய தணிக்கை முடிவுடன் வேறுபட்டால், சீரற்ற முன்னறிவிப்பின்றி சோதனையிடுதல் (RUC)-இன் மொத்தச் செலவையும் உற்பத்தியாளர் ஏற்க வேண்டும்.

---

*நிறுவனத்தின் சார்பாக கையொப்பம்*

*கையொப்பத்தின் தேதி*

---

*நிறுவனத்தின் பெயர்*

---

*நபரின் பெயர்*

©பதிப்புரிமை amfori 2017